

# திறவுகோல்

2050 பங்குனி
மாத இதழ்

பெண் கல்வி

ராசேந்திரனும் அவன் தென்னம்புள்ளையும்

பெண்ணவதாரம்

வெளியீடு
**மன்னையின் மைந்தர்கள் அமைப்பு**

மன்னையின் மைந்தர்கள்

மண்ணின் மாற்றத்தை நோக்கி

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# பெண் கல்வி



கற்பகம்

பெண்கள் தன் அறிவை வளர்த்துக் கொள்ளவும் நாட்டு நடப்பை தெரிந்துக் கொள்ளவும் அவர்களுக்கு படிப்பு தேவை. ஒருபெண் கல்வி கற்றால் அவள் குடும்பமே கல்வி கற்றதற்கு சமம் என பாரதியார் கூறியுள்ளார். ஆனால் தற்பொழுது பெண்கள் படித்ததும் வேலைக்கு செல்ல வேண்டும், சம்பாதிக்க வேண்டும் என்று தன்னை தானே வருத்தி கொள்கின்றனர். படிப்பு என்பது தற்காப்பு கலை மட்டுமே! பெண்கள் பள்ளி கல்லூரி என மேலும் மேலும் படித்து தன் அறிவையும் திறமையையும் வளர்த்து கொள்வது மிக அவசியம் தான். தொழிற்கல்வி படிப்பது கூட தங்கத்தை மெருகேற்றுவது போல் தான். திருமணம் ஆகாத பெண்கள் ஏன் நாங்கள் வேலைக்கு போய் என்னை படிக்கவைத்த தாய் தகப்பனுக்கு சம்பாதித்து கொடுக்க வேண்டாமா என கேட்பார்கள். படிக்க வைப்பதும், நல்ல மணமகளை மணம் முடித்து வைப்பதும் பெற்றவர்கள் கடமை.

திருமணமான பெண்கள், கணவனின் சுமையில் நானும் பங்குகொள்கிறேன் என்று பொய்யான காரணத்தை கூறி உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்ளாதீர்கள். கொஞ்சம் சிந்தியுங்கள், காலையில் எழுந்து மாலை வரை, வாசல் படி முதல் படுக்கையறை வரை உங்கள் வேலையை யாராலும் பகிர்ந்துகொள்ள முடியாது. காரணம் உங்கள் உடல் உபாதைகள், உங்கள் வீடு, கணவன், குழந்தைகள், உறவினர்கள் என அனைத்தையும் கவனமாக கவனிக்க வேண்டும். காரணம் விருந்தும் மருந்தும் மூன்று நாட்களுக்கு தான். உற்றார் உறவினர்கள் ஓரிரு நாட்களுக்கு மட்டும் தான். ஆயுள் முழுக்க நம் வீட்டு சுக போகங்களுக்கு  நாம் தான் அதிபதி.

மாதவிடாய் நேரத்தில் படும் அவஸ்தை, பிள்ளையை சுமக்கும் பொழுது அனுபவிக்கும் துன்பங்கள், பிள்ளையை பெற்று எடுக்கும் பொழுது உயிரை கொடுத்து உயிரை பெறும்போதும்,  பின் குழந்தையை ஆயுள் முழுவதும் வளர்ப்பது என இத்தனை கஷ்டங்களையும் மாறி மாறி அனுபவித்து கொண்டே வேலைக்கும் செல்ல முன் வருகிறீர்கள். ஆனால் ஆண்களுக்கு சம்பாதிக்கும் வேலையை தவிர வேறு என்ன சிரமங்கள் என்று சிந்தியுங்கள். கஷ்டப்பட்டு சம்பாதிக்கிறேன் என எந்த ஆண் கூறுகிறானோ அவன் ஒரு முட்டாள், சோம்பேறி, தன் கடமையை செய்ய தவறியவன். ஆண்களால் அப்பா, கணவன், அண்ணன், தம்பி என்ற தகுதி உடையவர்களாக இருக்க முடியும். இயற்கையாகவே ஆண்கள் மனவலிமையும் உடல்வலிமையும் பெற்றவர்கள், அதுவும் பெண்களைவிட இயற்கையாகவே சக்தி அதிகம் பெற்றவர்கள் தான் ஆண்கள்.

எனவே பெண்களே, நீங்கள்  வளரும் பொழுதும், படிக்கும் பொழுதும், திருமணத்திற்கு பிறகும் தன்னுடைய அறிவாலும் உடலாலும் திறமையானவர்கள் தான் என்று

பசுமரத்தில் அடித்த ஆணிபோல் நிரூபித்து விட்டீர்கள். அதனால் கல்வி கற்பதை தற்காப்பு கலையாக பயன்படுத்துங்கள். தற்காப்பு காலை என்பது, தாய் தகப்பனை இழந்த சூழலில், தாய் தகப்பன் உடநலமில்லாமல் இருக்கும் சூழலில், கணவனை இழந்த அல்லது கைவிடப்பட்ட சூழலில் உள்ளவர்கள் வேலைக்கு செல்வதே ஆகும். இதனை புரிந்து கொண்டு கணவனை சம்பாதிக்க சொல்லிவிட்டு, தனது குடும்பத்தையும் உற்றார் உறவினர்களை ஆரோக்கியமாகவும் அன்பாகவும் வழிநடத்தி, சந்தோசமான வாழ்க்கையை அனைத்து பெண்களும் அனுபவித்து வாழ எனது அன்பான வாழ்த்துகள்.

நன்றி,
இப்படிக்கு
கற்பகம் (ஆசிரியை)
அம்மாபேட்டை



செ. க. நிரூபன்
ஆறாம் வகுப்பு
A.S.V.M. பள்ளி
மன்னார்குடி

# பிரபஞ்ச சக்தி



ரோசி (ஆசிரியை)

பிரபஞ்ச சக்தி (அ) அண்டத்தின் சக்தி (cosmic energy), இது என்ன என்பதை நாம் அனைவரும் உணர்ந்துகொண்டாலே வாழ்வில் நம்மை சுற்றி மதப்பிரச்சனைகளே வராது. இது மிக எளிமையான விஷயம் தான். நாம் இதை கட்டாயம் புரிந்துகொள்ள வேண்டும்.

கடவுள், சாமி, தெய்வம், ஆண்டவர், இறைவன் , இப்படி பல பெயர்களால் அழைக்கப்படுபவர் யார்? நாம் அவரை பார்த்திருக்கிறோமா? ஒளியா? ஒலியா? உருவம் உடையவரா? உருவம் இல்லாதவரா? கற்சிலையா? இப்படி தான் இருக்கும் என்று யாராலும் உறுதியாக கூற முடியுமா? இப்படி பல கேள்விகள் உங்களுக்குள் எழுந்ததுண்டா? இதற்கு சரியான விடை என்னவென்றால், அது ஒரு சக்தி. அந்த சக்தி தான் பிரபஞ்ச சக்தி. அது நமக்குள்ளே தான் இருக்கிறது.

அதை அடைவது எப்படி? அனைத்து மதத்தினரும் கோவில், தர்கா, ஆலயங்களில் சென்று அவரவர் மதச் சடங்குகளை, பூசை, செபம், வழிபாடு, மன்றாட்டு வேண்டுதல் என்று பல விதங்களில் செய்கிறார்கள். இங்கு தான் நாம் ஒரு விசத்தை நன்கு புரிந்துகொள்ள வேண்டும். இப்படி நாம் அங்கு சென்று என்ன கேட்கிறோம்? நன்கு யோசித்து பார்த்தல் ஒரு உண்மை புலப்படும். நாம் அனைவருமே நமக்கு, பிறருக்கு தேவையான நன்மை தரும் காரியங்களை தேவைகளை மட்டுமே தான் கேட்கிறோம். பிறருக்கு தீமை தரும் வேண்டுதலையோ, பிறர் அழிய வேண்டும் என்ற நோக்கில் வேண்டுதலோ செய்வதில்லை. யாரும் அப்படி செய்யவும் மாட்டார்கள். இப்படி யோசித்தால்.. அனைத்தும் மத ஸ்தலங்களிலும் நேர்மறை எண்ணங்கள் மட்டுமே அதிகமாக இருக்கும். எனவே தான் அங்கே பிரபஞ்ச சக்தி குடிகொண்டுள்ளது.

நாம் பிரபஞ்ச சக்தியால் நம் வேண்டுதலை பெற்றுகொள்வது எப்படி? தினமும் அதிகாலை 4 மணி முதல் 5.30 மணி வரை பிரம்ம முகூர்த்தம்  என்று கூறும் இந்த நேரத்தில் எழுந்து நம்பிக்கையுடன், விடா முயற்சியுடன், கேட்கப்படும் நேர்மறை வேண்டுதல் அனைத்தும் கட்டாயம் கிடைக்கும். இதையே சித்தர்களும் வலியுறுத்துகிறார்கள்.

எனது வாழ்வில் நான் இதை செய்து வெற்றி அடைந்துள்ளேன். நீங்களும் முயன்று பாருங்கள். நன்றி!

# ராசேந்திரனும் அவன் தென்னம்புள்ளையும்

நம் தமிழ் தேசத்தில் பெரும்பாலும் தென்னையை ஒரு மரமாக யாரும் வளர்ப்பது இல்லை, அவற்றை தன் பிள்ளையாக எண்ணி வளர்பவர்களே அதிகம், ஆகவே தான் அவற்றை தென்னைமரம் என்று அழைக்காமல் தென்னம்புள்ளை என்று அழைக்கிறோம்.



பனையை வச்சவன் பார்த்துட்டு சாவான், தென்னையை வச்சவன் தின்னுட்டு சாவான் என்ற சொல்லாடல் கூட உண்டு.

கிராமம் தொடங்கி நகர்புறங்கள் வரைக்கும் தன் இட வசதிக்கேற்ப தென்னையை வளர்ப்பவர்கள் அதிகம்..

அதே தென்னம்புள்ள, தனயன் தந்தைக்கு உழைத்து செல்வம் ஈட்டி கொடுப்பது போல அவர்களை செல்வ சீமான் ஆக்கிய வரலாறும் உண்டு .

இதில் ஒரு உண்மை என்னவென்றால் தேங்காயோ தென்னமட்டையோ வளர்த்த மனிதர்கள் மீது விழுந்து அடிபட்டது என்று நாம் கோடியில் ஒன்று தான் கேள்வி பட்டு இருப்போம். அதற்கு தெரியுமாம் எப்போது விழ வேண்டும் என்று.

ராசேந்திரனும் அவன் தென்னம்புள்ளையும்

பொன்னியின் கரை கோடியில் ஒரு அடர்ந்த கிராமத்தில் ராசேந்திரன் என்ற ஒரு இளைஞன் வாழ்ந்து வந்தான், அவனுக்கு அவனது தந்தை திருமணம் செய்ய ஏற்பாடு செய்தார், முழுக்க முழுக்க வேளாண் கூலிகள் அவர்கள்.

காலையில் அப்பனும் மகனும் வயலுல எறங்குனா சூரியன் உதிக்கும் முன்னே மூனு மா வரப்பு வெட்டி வீசுவாங்கெ , ரெண்டு மூட்டை கூலிக்கு நெல்லு சேர்க்காம வீடு திரும்ப மாட்டாங்கே, அப்படி ஒரு உழைப்பாளி, அதனால் தான் என்னவோ பல இடங்களில் பொண்ணு தேடியும் கிடைக்கவில்லை, பார்த்து கொண்டே இருந்தனர் .

ஒரு நாள் வேலை முடித்து விட்டு நெல் மூட்டையை சைக்கிளில் கட்டி கொண்டு அவனும் அவன் கூட்டாளியும் வந்து கொண்டு இருந்தனர், ஒரு மர சக்கர அச்சு வண்டியில தென்னம்புள்ள வித்துக்கிட்டு வந்தாரு ஒரு கிழவன், பார்க்க கடைமடை பகுதிக்கு தெக்கத்தி ஆளு மாறி இருந்தாரு.

தம்பி எல்லாம் ஓடிட்டுயா ரெண்டு புள்ளைதான் இருக்கு எடுத்துகுரியான்னு கேட்டாரு , அவன் கூட்டாளி எனக்கு வேண்டாம்னுடான், ராசேந்திரன் மட்டும் ரெண்டு ரூவா கொடுத்து ஒரு புள்ளய மட்டும் சைக்கிள்ல கட்டிக்கிட்டு பயந்துகிட்டே வீட்டுக்கு போனான்.

அவன் நெனைச்ச மாதிரியே அவன் அம்மா இது எதுக்குடா இருக்குற காண்காணி இடத்துல இத எங்கடா ஊன போற என பாட்டா பாடுனா, அவன் அம்மாயி அன்னைக்கு ஊர்ல இருந்து வந்து இருந்தா, விடு ஆயி இருக்குற இடத்துல அவன் வைச்சிட்டு போகட்டும் என சிவாரிசுக்கு வந்தா.

குழியை வெட்டி ரெண்டு நாள் ஆர போட்டு, பாமணி ஆத்துல ரெண்டு கூட மணல் அள்ளியாந்து கொட்டி அந்த தென்னம்புள்ளையையும் ஊணி வைச்சான் , ஒலக்கையாள கிடிச்சி விட்டு காய விட்டு காய விட்டு தண்ணீர் ஊத்தினான்.

தென்னம்புள்ள வைச்ச ஒரு வாரத்துக்குள்ளயே அவனுக்கும் பொண்ணு அமைஞ்சது, இரு குடும்பமும் சம்மதம் தெரிவித்தன, அவனுக்கு தல கால் புரியல, இந்த புள்ள வீட்ல வைச்ச நேரம் தான் அந்த புள்ள வர போகுதுனு துள்ளி குதிச்சான்.

திருமணம் நடந்தது, அவன் மனைவியிடம் தென்னம்புள்ளய காட்டி நமக்கு பிள்ளை பிறக்கும் முன்பே நான் வளர்க்கும் பிள்ளை என்பான் , அவளும் அவ்வாறே கவனித்து கொள்வாள் . இடையில் அப்ப அப்ப வீராசாமி கொல்லையில் இருந்து சாணி எருவு வெட்டியாந்து கொட்டுவான்.

பல வருடங்கள் ஓடின..

அவனுக்கு ஆண் ஒன்னு, பொண் ஒன்னு ரெண்டுக்கும் கல்யாண வயசு, தென்னையும் காய்க்க ஆரம்பித்தது, அவனுக்கும் அவன் தென்னையை போல அர வழுக்கை விழுந்து இருந்தது, அன்றில் இருந்து அவன் வீட்டு தேவைக்கு என்று வெளியில் தேங்காய் வாங்கியதே இல்லை.

முதல் தேங்காய் எடுத்துக்கிட்டு போய் குலதெய்வ கோவில்ல உடைச்சி படி கட்டுல வைச்சிட்டு வருவான்.

அதில் விழுகின்ற தென்னை மட்டையை எடுத்து ஆத்துல ஊற வைத்து கீத்து பின்னி வைப்பான் வாசல் பகுதிக்கு போட, பச்ச மட்டையை வெட்டி அவனது மனைவி ஓலை கொத்து எடுத்து சீவு கிழிச்சி நாலு புடி விலக்கமாறு கட்டி வைப்பா.

( ராசேந்திரன் சாராய கடைக்கு போய்ட்டு வரும்போது அதே விலக்கமாரதான் அவன் பொண்டாட்டி கைல வைச்சிகிட்டு நிப்பா )

தேங்காய் வீட்டு தேவைக்கு பயன்படுத்துதல் போக வெளியில் கொஞ்சம் சேர்த்து வாங்கி தேங்காய் எண்ணெய் ஆட்டி அதுல பாதி கல்யாணம் ஆன மொவ வீட்ல கொண்ட குடுத்துட்டு வருவான், அதில் இருந்து வரும் தேங்கா புண்ணாக்கை ஆட்டு மாட்டுக்கு பயன்படுத்தி கொள்வான்.

தேங்காய் உரிக்கும் உரி மட்டையை விறகிற்கு பயன்படுத்தி கொள்வான், வீட்டில் சாமான் சட்டு விலக்கவும் அதுதான்.

காய்ந்த பாளைய எடுத்து ஊறவைத்து சின்ன சின்ன தா கிழிச்சு கீத்து போட பயன்படுத்தி கொள்வான்.

கூராஞ்சியை எடுத்து கொல்லை வாசல் கூட்டவும், மடித்த பிறகு பன்னாடையுடன் சேர்த்து அடுப்பு எரிக்க விறகிற்கு பயன் படுத்தி கொள்வான்.

அவன் மொவ மாசமா இருக்கும்போது வீட்டுக்கு வந்தா, அதே மரத்தில் இருந்துதான் எளனி வெட்டி கொடுப்பான்.

பிற்காலத்தில் அவன் பேர புள்ளைக்கு, மரத்தில் இருந்து விழும் குரும்பையை எடுத்து அதில் குச்சி சொருகி வீசி விளையாட கத்து கொடுத்தான்.

அதே பேர புள்ளைக்கு வீரனார் கோவிலில் காது குத்தும் பொழுது பச்சை தென்ன குருத்தை சீவி படையலுடன் சேர்த்து வைப்பான்.

அப்ப அப்ப விழுகிற தேங்காயை சேகரித்து வைத்து அதுல நாலுத மொவ வீட்டிற்கு கொண்டு போய் போடுவான்.

தென்னம் புள்ள வளர வளர அவன் குடும்பமும் புள்ள குட்டி, பேரன் பேத்தி என செல்வ செழிப்போடு வளர்ந்து வந்தன.

வந்ததய்யா புயல் காத்து ஆட்டிப்படைக்க ஐப்பசி மாதத்தில்.. (கஜா புயல்).

அந்த பகுதியையே இரவு முழுவதும் சொழட்டி சொழட்டி அடிச்சது, பல பேருக்கு வீடு வாசல் பிச்சிகிட்டு போச்சு. அந்த இருட்டிலும் காற்றிலும் வெளியில் நின்று வேடிக்கை பார்த்து கொண்டு இருந்தான் கையில் சிங்கப்பூர் டார்ச் லைட்டுடன்.

தென்னைமரத்தில் மேல் பகுதியில் லைட் அடித்து பார்த்து கொண்டே இருந்தான், மரம் மடங்கி எழுந்தரித்தது, ஊரையே சாய்க்க இவன் மட்டும் நிமிர வழி ஏது.

இவன் பிள்ளையை, தென்னம் புள்ளையை சுழற்றி வேரோடு சாய்த்தது, போச்சுடா மோசம்னு கத்துனான்....

மரம் விழுந்தது அவன் வீட்டில் மீது, அதை பற்றி அவன் கவலை படவில்லை. எப்படியும் சரி செய்து கொள்ளலாம் என்று அவன் நினைத்தான்.

புயலில் முறிந்து விழுந்த மரத்திலும் உயிர் ஊசல் ஆட சிறிது சிறிதாக துளிர் விட ஆரம்பித்தன, ஆனா மனுசன் எந்திரிக்கவே இல்ல, சவரம் செஞ்சு மாச கணக்கா ஆச்சு, மனச தேத்திகிட்டு ஒரு துக்ககாரன் மாதிரியே நடமாட ஆரம்பிச்சான்.

கொஞ்ச நாள் கழிச்சு மரத்த செங்கல் காலாவைக்கு விறகிற்கு கேட்டாய்ங்க, கொடுக்க முடியாதுனு சொல்லிட்டான்.

கடைசியா அந்த மரத்த அறுத்து புயலில் சேதம்
அடைந்த வீட்டை சரி செய்து வீட்டிற்கு
சட்டமா செய்து ஓடு மாட்டி கிட்டான்.

ஒரு நாள் விட்டத்த பார்த்து அவன் சொன்னான்
நான் செத்து  நீ உயிர் வாழ இருக்க.... நீ செத்து என் வீட்டுல
நிக்கிறியே, என்ன பாவம் செஞ்சு தொலைச்சேனோ



தினேஷ் குமார் மாரியப்பன்
டெல்டாகாரன்

# நூல்வேலி

நூல்வேலியே
மெய்க்கு வேலியாகிறாய்

மனிதனுக்காக
குளிக்கும் நீ
கொடியில் பூத்து
காய்கிறாய்!

சிலருக்கு அழகு
சிலருக்கு அந்தஸ்து
சிலருக்கு மானம்
சிலருக்கு உயிர்
சிலருக்கு உழைப்பு நீ!

மனிதன் உரிக்கும் தோலே!
பொதுவுடைமையைப் பேசுகிறாய்
சீருடையாக!

கஞ்சியிடும்
சலவைத் தொழிலாளிக்கு
கஞ்சி ஊற்றும்
அன்னையே!
கட்டுபவனுக்கு
அரணாகும் தந்தையே!
உள்ளங்கையில் அமர்ந்து
வியர்வையைக் குடிக்கும்
காதலியும் நீ!

கக்கத்தை விட
தோளில் தான்
சமநிலையாக வாழ்கிறாய்
தோழனாக!

சுயநலக்காரனின்
அசிங்கத்தை மறைத்து
நிறமிழக்கும் நீ...
தொட்டிலாக
தூக்கத்தை அளிக்கிறாய்!
தூக்காக மாறி
உயிரையும் பறித்துவிடுகிறாய்!

உழைப்பவனுக்கே தெரியும்
பட்டை விட சிறந்தது
கோமணமே!

ஏழைகளிடத்தில் மட்டும்
கிழிந்தே கிடக்கிறது
உன் நெஞ்சம்...
கண்ணீரைக் குடிப்பதாலோ?

--

சா.கா.பாரதி ராஜா
செங்கல்பட்டு
9944315732

# வயல்வரப்பு

களத்து மேட்டு வயலெல்லாம்
கால காலமா செழிச்சிருக்கும்

சின்ன பயலும் நடவு நட்டு
நெற்கதிரும் விளஞ்சு
வயகாட்ட எட்டி பார்க்க

சிலது வளைஞ்சு நெளிஞ்சு
பூமி தொட ஆசைப்படும்


விளைச்சல் ஒன்னும்
கொறச்சல் இல்ல

ஓடையில தண்ணி தேங்கி நிக்க
போர் பம்பு செட்டுல அருவி கொட்ட
மூச்சு காத்தும் சுத்தமிங்க
அந்த நெல்லுயெல்லாம் காத்துல
ஆடயில கண்ணசராது
பார்க்க தோனுமுங்க

மேகம் கொஞ்சம் எட்டி பார்க்க
மழைத்தண்ணி
விருந்தாளியா வந்துடுவா

ஏழைக்கும் சோறு அவ போட்டு
ஏரிப்பக்கம் போய்டுவா
இளங்காத்தோட மண்வாசம் வீசயிலே
களத்து மேடே காத்துக்கிடக்கும்
பச்சைபசலென ஒயிலாட்டம் ஒன்னு
வைக்கும் கூத்தாட்டம் பார்பது போல்
கூடி நின்னு ஊரு ஜனம்
பார்க்குதையா!

–
**கனிமொழி சீனிவாசன்**



வரைந்தவர்
R. பூரணி
பட்டுக்கோட்டை





**நிரஞ்சனா**

க/பெ. கபிலன்,
தெற்கு தெரு,
375, மாங்கொட்டைநத்தம்,
வல்லூர் அஞ்சல்,
மன்னார்குடி தாலுக்கா

# மருத்துவ புரிதல்



ராணிச்சந்திரன்
மன்னார்குடி

எங்களிடம் மருத்துவத்திற்கு வருபவர்களிடம், மலச்சிக்கல் உள்ளது என்று கூறினால், இல்லை! இல்லை! நன்றாக மலம் போய் விடுகிறது என்பார்கள். அஜீரணமும் மலச்சிக்கலும் இல்லை என்றால் மருத்துவத்திற்கு வரவேண்டிய அவசியமில்லை. அஜீரணமும் மலச்சிக்கலும் ஆதிநோய்கள், மற்ற அனைத்தும் அதன் வழிவந்த மீதி நோய்கள் என்பது மரபு மருத்துவ பழமொழி. மலச்சிக்கல் என்றால் என்ன? என்பது பலருக்கு தெரியவில்லை. மலம் கழிக்க சென்றால் 10 நிமிடத்திற்குள் கழிவறையிலிருந்து வெளியே வந்து விட வேண்டும். கழிவறையில் அமர்ந்தவுடன் வாயுகழிவு வெளியேற வேண்டும். பிறகு திரவக் கழிவு வெளியேற வேண்டும். அதன் பிறகு தான் திடக்கழிவு வெளியேற வேண்டும். அந்த திடக்கழிவும் உரித்த வாழைப்பழம் போல் வெளியேறியவர்களுக்கு தான் மலச்சிக்கல் இல்லை. குடலுறிஞ்சிகள் நன்றாக வேலை செய்கிறது என்பதாகும். மலம் கெட்டியாக போக கூடாது. தண்ணீரும் மலமும் கலந்து போக கூடாது. 1/2 மணிநேரம் கழிவறையில் உட்கார்ந்து இருக்க கூடாது. இப்படியிருந்தால் உடல்நலம் மட்டும் அல்ல மனநலமும் பாதிக்கும். மலச்சிக்கல் இருக்கா? இல்லையா? என்பதை நீங்களே தெரிந்துகொள்ளுங்கள்.

---




கா.கரண் யுதன்தேவ்
UKG



# எல்லாம் போச்சு.. இனிமேல் என்ன பேச்சு..

-------------------------------------------------

விவசாயி புள்ள வெளிநாடு போச்சு.
விவசாய நிலம் எல்லாம் தரிசா போச்சு.
நல்ல உணவெல்லாம் நாடு கடத்தியாச்சு.
நாகரிக உணவுக்கு நாக்கு அடிமையா போச்சு.

காசுக்காக காட்டை எல்லாம் காயப்படுத்தியாச்சு.
காட்டு விலங்குகளை கருணை கொலையால் கட்டுப்படுத்தியாச்சு.

ஆறெல்லாம் மணல் அள்ள என்றாகி போச்சு.
ஏரிக்குள்ள கட்டிடம் எழுந்து நின்னாச்சு.

பூமி தாயின் மார்பு வற்றி நிலத்தடி நீர் தள்ளியே போச்சு.
உயிர்கள் இல்லாமல் சுத்த போகுது இந்த பூமி பாறை.

மனிதா உனக்கென்ன கவலை நீ ஓட்டி செல் உன் சொகுசு காரை.

--

ராம். சி
பேராவூரணி

# பிப்ரவரி 14


விஜயவர்மன்

பிப்ரவரி 14 ஆம் தேதியை ஆவலுடன் எதிர்பார்த்த இளைஞர் பட்டாளம் எவ்வளவு பெரிது? அவ்வளவு நபர்களுக்கு மத்தியிலும் அதே நாளை வேறுவிதமாக எதிர்பார்த்து காத்திருந்தது ஒரு குழு. காரணம் 2020ஆம் ஆண்டின் பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டதும் அதே பிப்ரவரி 14 அன்று தான்.

அந்த குழு நிதி வல்லுநர்களையோ, பொருளாதார நிபுணர்களையோ கொண்ட குழு அல்ல, ஒரு தன்னார்வல இயக்கத்தின் உறுப்பினர்களை உள்ளடக்கிய குழு. எதற்காக அவர்கள் பட்ஜெட் தாக்கல் பற்றி கவலை கொள்ள வேண்டும்? சமூக பணி செய்யும் அமைப்பிற்கும், பட்ஜெட் தாக்கல் செய்வதற்கும் என்ன பிணைப்பு உள்ளது என்ற கேள்வி எழுவதில் ஆச்சரியமில்லை.

சமூக சேவை, சமூக நலம், சமூக பணி ஆகிய இம்மூன்று கூற்றுக்களின் வித்தியாசத்தை அறிந்து கொண்டால், சில கேள்விகளுக்கு எளிதில் விடை கிடைத்துவிடும்.

சமூக சேவை: கோவிலுக்கு செல்லும் பொழுது, வாசலில் உள்ள எளியோருக்கு தானமிடுகிறோம்; பார்வையற்றவர்களுக்கு சாலையை கடக்க உதவுகிறோம்; இது சமூக சேவை (Social Service) எனப்படும். இதற்கு எந்த வரைமுறையும், பயிற்சியும் தேவையில்லை.

சமூக நலம்: குடிசை மாற்று வாரியம் மூலம் வீடு கட்டி தருவது, குறிப்பிட்ட சமூகத்தின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் ஊக்கத் தொகை தருவது; இது சமூக நலம் அல்லது பொது நலம் (Social Welfare) எனப்படும். இதனை தனி மனிதனோ, ஒரு இயக்கமோ செய்ய இயலாது. அரசும் அரசாங்கமும் செய்யக்கூடியது.

சமூக பணி: ஒருவருக்கு மீன் பிடிக்க கற்றுத தருவது போல், தனக்கான தேவைகளை தானே பூர்த்தி செய்து கொள்ள வழி வகை செய்வதும், அவ்வாறான மக்களின் உரிமைகளுக்கு குரல் கொடுப்பதும், வழிநடத்துவதும் சமூக பணி எனப்படும். இதற்கு பயிற்சியும், குழு ஒத்துழைப்பும் தேவை.

குறைகளுக்கு புகார் அளிப்பது, சேவை வேண்டி மனு வழங்குவது தொடங்கி பொது மக்களின் வாழ்வாதாரத்தை வளப்படுத்தும் பணிகளை மேற்கொள்வது வரை அனைத்தும் சமூக பணி என்கிற கோட்பாட்டிற்குள் வரும். இருப்பினும், குப்பைகளை அகற்றுவது, மரக்கன்று நடுதல், இரத்த தானம் அளித்தல் ஆகிய பணிகள் மட்டுமே தன்னார்வ

அமைப்புகளின் பணிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பழைய பட்ஜெட் தாக்கலில் உள்ள நிலுவைகள் குறித்து விவாதிப்பது தனியொரு அரசியல் கட்சியை நோக்கி தொடுக்கப்படும் கேள்விகளல்ல, அவை அரசாங்கத்தை நோக்கிய கேள்விகள். புதிய பட்ஜெட் தாக்கல் பற்றி கலந்தாலோசிப்பது நிதிநிலை விமர்சனங்களல்ல, பொருளாதார விழிப்புணர்வை மக்களிடம் கொண்டு செல்லும் முயற்சி. இங்கு அரசையும் அதன் செயல்களையும் நோக்கி கேள்வி கேட்கும் எந்த ஒரு அமைப்பிற்கும் எதிர்கட்சியின் சாயங்கள் பூசப்படுவது அறிவீனத்தின் உச்சம்.

சமூக பணி என்பது வளமான சமூகத்தை கட்டமைத்தலும், அதற்கு வழிவகைசெய்தலும். அவ்வாறிருப்பின் தற்சார்பு வாழ்க்கை முறையை ஊக்குவித்தல், இயற்கை வேளாண்மை செய்ய வழிவகுத்தல், பல தரப்பட்ட வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், அரசின் சேவைகள் எளிதில் மக்களுக்கு கிடைக்க வழிவகை செய்தல் ஆகிய பணிகளும் சமூக பணிகள் தான்.

மரம் நடுதல், குருதி கொடை, நெகிழி பைகளை அகற்றுதல் ஆகிய பணிகளை போன்று வேலைவாய்ப்பு, பொருளாதாரம், நிதி மேலாண்மை, அரசின் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் ஒவ்வொரு தன்னார்வ குழுவின் தலையாய கடமை என்பதை நினைவில் கொள்வோம்.

ஏனெனில், துன்பப்படுபவர்கள், துனபப்பட்டு கொண்டேயிருக்க வேண்டும், நாம் உதவி செய்து கொண்டேயிருக்க வேண்டும் என எண்ணுபவர்கள் சமூக பணியாளர்களல்ல. நிறைவேறுகிறதோ, இல்லையோ எந்த ஒரு தன்னார்வ குழுவிற்கும் Sunset Period என்ற கோட்பாடு தேவை. அதாவது, புகார் பெட்டியினுள் பூக்கள் விழும் நாள்.

--

**விஜயவர்மன்**
மன்னார்குடி

# பெண்ணவதாரம்

கண்கள் இருண்டும்
கணவனை இழந்தும்
கைத்தடியைக் கைப்பிடியாய் கொண்டு
முத்துப் பற்கள் மூன்றும் முன் வர
மனதார பேரப்பிள்ளைகளோடு
சிரிக்கும்
என் மூதாதையாரை எண்ணி
பெருமிதம் கொள்கிறேன்

சகோதரியின் பிள்ளைகளைத்
தன் பிள்ளைகளாகவே கருதியும்
களிப்பில் புன்னகையுடனும்
தவிப்பில் ஆறுதலாகவும்
இன்ப துன்பத்தில்
பங்கிட்டுக்கொள்ளும்
என் பெரியம்மா சின்னாம்மாவை
எண்ணி
பெருமிதம் கொள்கிறேன்

தாய் வழியோ தந்தை வழியோ
அத்தை மடி உண்மையில்
மெத்தைத் தான்...
அதட்டலைக் கூட அழகாய் கூறும்
என் அத்தையின் அன்பை எண்ணி
பெருமிதம் கொள்கிறேன்

புதுஉறவைத் தேடி
புகுந்த வீட்டிற்கு செல்கிறோம்
என்ற மகிழ்வைவிட
பழைய உறவுகளை விட்டு
செல்கிறோமே
என்ற மனவலியோடு மணமுடித்து
சென்ற
என் சகோதரிகளின் மனவலிமையை
எண்ணி
பெருமிதம் கொள்கிறேன்

யாரென்றே அறியாமல்
அண்ணணோடு வலம் வந்து
வீட்டில் ஒருவராக வாழும்
என் மதனியின் நம்பிக்கையை எண்ணி
பெருமிதம் கொள்கிறேன்

கணவனின் ஊடலில்
கண்ணீர் மல்க மறைந்து நிற்கையில்,
அடையாளம் கண்டு அறிவுரைக் கூறும்
என் மாமியாரின் மனதை எண்ணி
பெருமிதம் கொள்கிறேன்

தன்னைப் போல் நினைத்து
தன் குறும்பினாலும் ஊக்குவிப்பாலும்
தமக்கை என்று நினைவூட்டும்,
என் நாத்தியின் சிந்தனையை எண்ணி
பெருமிதம் கொள்கிறேன்

காய்ச்சியிருக்கும் உள்ளங்கைகளோடும்
தீக்காயம்பட்ட பின்னங்கைகளோடும்
முதுகு தண்டு முற்றிலுமாய்
வலியெடுத்தும்
இருகிய கால்களோடும்
என்னில் புத்துணர்வு பரவ
முகமலர சிரிக்கும்
என் தாயின் மன உறுதியையும்
அளவில்லா அன்பையும்
பாரபட்சமில்லா பாசத்தையும் எண்ணி
பெருமிதம் கொள்கிறேன்

இவற்றிற்கு மேலாக
எத்தனைத் தடைகள் வந்தபோதும்
முக கண்ணாடி முன்
உன்னால் முடியுமென்று
ஊக்குவிக்கும் என்னை எண்ணியே
பெருமிதம் கொள்கிறேன்.....

இவ்வுலகில்

கூலிக்கார பெண்ணாக, காய்கறிக்கார பெண்ணாக, சுயதொழிலதிபராக, ஆட்சியராக, ஆசிரியராக, அரசியல்வாதியாக, மருத்துவராக, அதிபராக, வக்கீலாக, மேலும் வீட்டுத் தலைவியென்று எண்ணற்ற அவதாரங்களொடு போராடும் ஒவ்வொரு மனிதிக்கும் சமர்ப்பிக்கிறேன்.

பெண்ணாய் பிறந்ததை எண்ணி
பெருமிதம் கொள்ளுங்கள்......

--
நித்யா சம்பத்



கோலம்
தனலட்சமி

# கர்ப்ப காலத்தில் பெண்களுக்கு இடுப்பு வலி வருவதன் அறிவியல் காரணம்

பெண்களுக்கு பிரசவ காலகட்டத்தில் குறிப்பாக கர்ப்பம் தரித்து 6 மாதம் முதல் குழந்தை பிறக்கும் வரையிலான கால கட்டத்தில் பெருவாரியான பெண்கள் சந்திக்கும் ஒரு பிரச்சனை இடுப்பு வலி, ஆங்கிலத்தில் low back pain சொல்வார்கள் அது ஏன் வருதுன்னு நம்மில் பலருக்கு தெரியும். வயிற்று பகுதியில் திடீர்ரென எடை அதிகம் கூடுவதால் இடுப்பு வலி வருகிறது என்று பொதுவாக நமக்கு தெரியும். ஆனால் அதன் பின்னணியில் உள்ள மிக சரியான அறிவியல் காரணம் என்ன என்பதைப் பற்றி இந்த கட்டுரையில் பார்ப்போம்.

பொதுவாகவே மனிதர்கள் புவி ஈர்ப்பு விசையால் ஈர்க்கப்படுவதால் தான் எடைன்னு ஒன்னு நமக்கு இருக்குன்னு ஏற்கனவே நாம் வேறு ஒரு கட்டுரையில் ஒன்றில் பார்த்தோம். எடையானது பொதுவா மனிதர்களோடா புவி ஈர்ப்பு மையப் புள்ளி வழியாக பயணித்து பாதங்கள் வழியாக நம் நிலத்தை அடைகிறது. இங்கே மைய ஈர்ப்பு புள்ளி என்பது நம் உடலின் மையமான விலா எலும்பைதான் குறிக்கிறது. நாம் நிற்கும் நிலையில் தான் நம் முழு உடல் எடையும் பாதம் வழியாக செங்குத்தாக பூமியை நோக்கி அடையும். இந்த செங்குத்தான நிலையில் நம் தலை முதல் பாதம் வரை ஒரு அச்சுக்கோடு பயணிக்கும்.

பொதுவாக கடைசல் பொறி cnc இயந்திரத்தில் head stock, tail stock இடையில் ஒரு பொருளை ஒரே அச்சுக்கோட்டில் மையம் விலகாமல் பிடித்து நிறுத்தி தான் வேலை பார்க்க வேண்டும். பொருளின் மைப்புள்ளி என்பது மைய அச்சுக்கோட்டில் தான் இருக்க வேண்டும்.

எந்த பொருளுக்கும் அல்லது மனிதர்களுக்கும் மைய அச்சு கோடும் (center axis line) மையப் புவி ஈர்ப்பு புள்ளியும் ஒரே நேர் கோட்டில் தான் இருக்க வேண்டும். அப்படி இல்லாமல் விலகி சென்றால் அது மைய விலக்கு ஆங்கிலத்தில் eccentricity என்பார்கள்.அப்படி நம் உடலில் இது போல மைய விலகல் ஏற்பட்டால் நம்மால் நிமிர்ந்து நேராக நடக்க முடியாது. பொதுவாக ஒரு சமுகத்தில் மற்றவர் சிந்தனைகளை விட்டு விலகி ஒரு புதிய சிந்தனையில் இருப்பவர்களை eccentric என்று குறிப்பிடுவதன் காரணம் இதுதான்.

இது அனைத்து மனிதர்களுக்கும் பொருந்தும் ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக

இருந்தாலும் சரி. இதுவே பிரசவ காலத்தில் என்ன நடக்கும் சற்று பார்க்கலாம். 6 மாதம் ஆக ஓரளவு குழந்தை தாயின் வயிற்றில் வளர்ந்த நிலை அடைகிறது அப்போது தாயின் வயிறு சற்று தெரிய ஆரம்பிக்கிறது. அந்த கால கட்டத்தில் அதாவது 6 முதல் 10ம் மாதம் வரை உள்ள கால கட்டத்தில் வயிறு பகுதி தோராயமாக 7 முதல் 10 கிலோ எடை வரை உயர்வதாக மருத்துவ உலகம் தெரிவிக்கிறது. அது மட்டும் இல்லாமல் இந்த கால கட்டத்தில் இன்றைய வாழ்வியல் சூழலில் தோராயமாக வயிறு எடை போக வேறு உடல் பகுதிகளில் 6 முதல் 15 கிலோ வரை எடை உயர்கிறது...

உதாரணமாக 50 கிலோ எடை கொண்ட பெண் பிரசவ காலத்தில் 10 முதல் 20 கிலோவோ அல்லது அதற்கும் மேலோ இருப்பதாக மருத்துவ கணிப்பு குறிப்பிடுகிறது. இதுவே இரட்டை குழந்தைகள் எனில் 15 முதல் 25 கிலோவுக்கு மேலே இருக்கும்... முன்பு சம சீரான முறையில் நம் உடலில் பரவி இருந்த எடை இப்போ வயிறு பக்கத்தில் மட்டும்  ஒரு பெரிய எடை மாற்றம் நாளுக்கு நாள் நடக்க ஆரம்பிக்குது. இந்த எடை மாற்றம் தான் நம் உடலில் ஒரு eccentricityயை ஏற்படுத்துகிறது. அது எப்படின்னு ஒரு எளிய உதாரணம் மூலம் தெரிஞ்சுக்கலாம்.

ஒரு 15 கிலோ எடை கொண்ட ஒரு பெரிய கல்லை நீங்கள் மெதுவாக கீழ் இருந்து வயிறு பகுதி வரை தூக்கி வயிற்றை ஒட்டி நிறுத்த வேண்டும்..அப்போது என்ன நடக்கிறது என்று கவனிப்போம். நம் வயிறோடு ஒட்டி நம் கைகளில் தாங்கி  இருக்கும் எடை மற்றும் நம் உடலின் எடை இரண்டும் இணைத்து நம் பாதம் சுமக்க வேண்டும். இதனால் நம் உடலின் மையப்புள்ளி விலா எலும்பிற்கும், அதோடு இணைந்து உள்ள கல்லின் மையத்திற்கும் இடையே ஒரு தொகு விசை ஏற்படும் (resultant force).

தொகு விசை என்பது பல விசைகளின் தொகுப்பு. அதாவது வயிற்றில் உள்ள குழந்தையினால் ஒரு ஈர்ப்பு  விசை மேலும் தாயின் உடலால் ஒரு ஈர்ப்பு விசை இரண்டும் சேர்ந்து ஏற்படும் விளைவை  இந்த தொகு விசை வைத்து கணக்கிடலாம். இந்த தொகு விசை அதிகமாக இருப்பதால் இடுப்பில் பளு அதிகமாகி இடுப்புவலி ஏற்பட ஒரு காரணம்.

உடலின் அச்சு கோட்டு பகுதி  விலா எலும்பு வழியாக இருந்த நம் எடை  இப்போது கல்லின்  எடை காரணமாக, சற்று மையம் விலகி இரண்டுக்கும் நடுவில் ஏற்படும். இதனால் நம் புவி ஈர்ப்பு மையம் அச்சு கோட்டை விட்டு resultant force இருக்கும் இடத்திற்கு நகரும். இப்போது நம் உடம்பு செங்குத்து எடையோடு சேர்ந்து வளை திருப்புமை அதாவது bending moment ஏற்படுகிறது. இது வலஞ்சுழியாக (clockwise) இல் நம்மை வளைக்கும். இதனால் நாம் முன்னோக்கி எடை இருக்கும் பக்கம் வளைவோம். இப்போ இதனால் வயிறு பகுதி அமுக்கு விசையும் முதுகு பகுதி இழு விசைக்கும் ஆட்படுத்த படும். எங்க எல்லாம் இழுவிசை அதாவது tension இருக்கோ அங்க எல்லாம் நமக்கும் டென்ஷன் தாங்க. இதனால் இடுப்பு எடை அதிகம் உள்ள வயிற்றுப்பகுதி நோக்கி இழுக்கப்படுகிறது. இது தான் பிரசவ காலத்தில் பெருவாரியான

பெண்களுக்கு வலி ஏற்படுகிறது. முன்னோக்கி இழுக்கும் எடையை சரி செய்து கொள்ள பெண்கள் இடுப்பில் கைவைத்து உடலை பின்னோக்கி வளைந்து நெளிந்து ஓரளவு இடுப்பு வலி குறையும். இந்த வலி ஏன் வருகிறது என்று பார்த்தோம். இதை தவிர்க்க முடியாது என்பதையும் பார்த்தோம். இது ஏன் எதற்கு எப்படி என்று புரிந்து கொள்ளாமல் வலி அதை சரி செய்ய pain killer மாத்திரைகள் போட வேண்டாம்.. இந்த வலி நிவாரணி மாத்திரைகள் உண்மையில் வலியை குறைப்பது இல்லை... போதை பொருள் மூளையை திசை திருப்புவது போல மூளையில் இது வலி இல்லாத மாதிரி அந்த எண்ண ஓட்டத்தை திசை திருப்புகிறது. மருந்தின் வீரியம் குறையும் போது மீண்டும் வலி உணர்கிறோம். வலி நிவாரணி பயன் படுத்துவது கிட்னி செயல் இழப்பு போன்ற உடல் உபாதைகள் வருவதாக மருத்துவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

எனவே ஆரோக்கியமான முறையில் உடல் உழைப்பு செய்வதால் இடுப்பு பகுதியின் பாரம் தாங்கும் தன்மையை வலு படுத்த அந்த பளுவை தாங்கும் வண்ணம் மாற்றலாம். இதனால் தான் அந்த காலத்தில் கர்ப்பமான பெண்களை வீட்டு வேலை களை இயன்ற வரை நம் முன்னோர்கள் செய்ய சொன்னார்கள். இங்கு இதே சித்தாந்தத்தில் ஒரு நகைச்சுவை தகவல்... 6 முதல் 10 மாதம் வரை பிரசவிக்கும் வரை 4 மாதங்கள் பெண்கள் அனுபவிக்கும் பெண்களை காட்டிலும் தொப்பை உள்ள ஆண்கள் தங்கள் ஆயுட்காலம் வரை அனுபவிக்கிறார்கள். நீங்க இதில் இருந்து தப்பிக்க ஒரே வழி... உடற்பயிற்சி செய்து வயிற்றில் இருக்கும் தேவையற்ற எடை குறைக்க வேண்டும் சொல்லிக்கொண்டு வேறு ஒரு கட்டுரையில் சந்திக்கலாம்...

எழுத்தாக்கம்

**மன்னை மனோஜ் குமார்**

**மன்னை பாலாஜி பிரசாத்**





# பள்ளிக்கூடத்திற்கு முன்பு

கொய்யக்காயும் இலந்தை பழமும்
விற்கின்ற பாட்டிகள்
இன்னும்
இருந்து கொண்டே தான்
இருக்கிறார்கள்...

கிழிந்த சேலையோடும்
காய்ந்த வயிற்றோடும்,
வாங்குவதற்கு மட்டும்
எந்த மாணவர்களும்
வருவதேயில்லை...

எல்லோர் கையிலும்
பைவ் ஸ்டாரும்,
டைரி மில்க் சாக்லெட்டும்
அலங்கரிப்பதால்,
அழகிழந்து போகிறது...
பாட்டிகளின் வாழ்க்கை,

எவ்வித சலனமுமில்லாமல்!
தனது
பசி தீர்க்க
இடைவிடாது
கடிக்கும் கொசுவுக்கு
மன்னிப்பை தவிர
வேறு ஒன்றும் தர
முடியவில்லை ...

என்னால் இப்போது,
உயிரைக் கொல்வது
மிகப்பெரிய
பாவம் என,
சத்தமாய் மகள்
பாடம் படித்துக் கொண்டிருக்கும்
வீட்டில்!

தாத்தா இறந்த
வீட்டிற்குள்
நீண்ட நேரம்
நிலைத்திருந்த மௌனத்தை
உடைத்து போகிறது...

பெயர் தெரியா குழந்தையின்
அழுகை சத்தம்,
இதை யாரெனும்
ஒருவராவது
பார்த்தாவது அழுகட்டும்,
தனித்து அழும்
பாட்டிக்கு துணையாக!

நாகரிகம் தோன்றியதாய்
சொன்ன
ஆற்றங்கரைகளை
ஆக்ரமித்துக் கட்டிய
கட்டிடங்கள்,
நாகரிக பொருட்கள்
விற்கும் அங்காடியாய்
மாறிப்போயிருந்தது...

மனிதர்களின்
அநாகரிகத்திற்கான
அடையாளத்தோடு!

வழக்கமாய் வியாபாரத்திற்கு
ஏழு மணிக்கு
செல்லும் அப்பா,
இப்போதெல்லாம்
ஆறு மணிக்கே
கிளம்பி விடுகிறார்...

காலை டிபனாய் நான்கு
இட்லி சாப்பிடுபவர்
மூன்றாய்

குறைத்துக் கொள்கிறார்...

உடல் அலுப்பிற்காக
முன்பு குடித்த குடியை
இப்போது
அடியோடு நிறுத்திவிடுகிறார்...

மூன்று மாதத்திற்கு ஒரு
முறை புதுச்சட்டை
எடுப்பதை
ஆறு மாதத்திற்கு ஒரு
முறையாக
மாற்றிக் கொள்கிறார்...

வழக்கமாக பேருந்தில்
செல்லும்
ஊர்களுக்கெல்லாம்
இப்போதெல்லாம் தனது
பழைய மிதி வண்டியிலேயே
செல்கிறார்...

நீண்ட நாட்களாய் மகளுக்கு அமையாத
வரன்
இப்போது அமைந்து
விட்டதால்,
கல்யாண செலவிற்காக
தேய்த்துக் கொண்டிருக்கிறார்...

அப்பா,ஒவ்வொரு நாளும்
தன் உடலோடு தனக்கான
தேவைகளையும்!

கால் ஒடிந்த கன்றுக்குட்டியைப்
போல இறுதியாகவே
வருகிறார்கள்...
பாட்டியின் மரணத்திற்கு,
சொத்துச் சண்டையில்
பிரிந்து போன
ஒவ்வொரு சொந்தங்களும்!

முன்பே
அவன் இறந்ததை
அறிந்திருந்தாலும்
இப்போது தான்
அதிகம் வலிக்கிறது...
அவனின்
பார்வையற்ற மகளையும்,
விபத்தில் கால்களை
இழந்த
மகனையும் பார்க்கும் போது!

வாழ்க்கையில்
யாரை எல்லாம்
பார்க்கக்கூடாதென நினைக்கிறோமோ,
அவர்களையெல்லாம்
பார்க்க வைத்துவிடுகிறது...
நம்மால்
பார்க்க முடியாத விதி!

வலியோடு வாழ்ந்து
பழகிவிட்டேன்...
எப்போதோ ஒரு முறை
கவலை மறந்து
சிரிக்கையில்,
புதிராய் பார்க்கிறது
எனக்கான வானம்!

--

**மு.முபாரக்,**
முதுநிலை எழுத்தர்,
எண் 273 வாளாடி கூட்டுறவு வங்கி,
வாளாடி,
இலால்குடி வட்டம்,
திருச்சி மாவட்டம் - 621218
அலைபேசி: 8072600090

# தேடினேன் கிடைத்தது!

நான் வேண்டும் வரத்தினைக் கொடுக்கும் இறையவன்!
என்னைத் தாங்கும் தாய் அவன்!
எனக்கு அறிவுரைக் கூறும்போது என் தந்தை அவன்!
இருளிலும் என்னை விட்டு நீங்காத நிழல் அவன்!
என் துன்பத்தை தூக்கி எறியும் வெளிச்சம் அவன்!
அன்பிற்கு பாத்திரமானவன்!
என் காதல் ராட்சசன் என்னவன்....!
தாய் மடி தேடும் குழந்தையாய்
தவிக்கத் தூண்டும் அவன் அன்பு...!
தேடல் நிறைந்த உலகில் எந்த தேடலும் இல்லாமல்
எனக்கு கிடைத்த பொக்கிஷமான காதல் அவன்....!
முதலும் அவன் தான்.. முடிவும் அவன் தான்..
நினைத்தாலும் பிரம்மனால் கூட
அவனை போன்ற பண்பாளனை
படைத்திடவே முடியாது ...!
மகிழ்வை தா இறைவா என்றேன்...
தந்துவிட்டான் என் தர்மனை....!
அவனில் அடைபட்ட என்னை
காதலித்தே விடுதலை செய்வான் என்னவன்......!
காதலும் கவிதையும் உனையன்றி பிறர் தர வாரா.....!
அவனின் பேரன்பிற்கு முன்னுரை வாசித்துக் கொண்டிருக்கிறது
முத்தமிழ் கவியும்....!
தேடினேன் கிடைத்தது
காதலாகவும் கவிதையாகவும்!..

--

பொன்மணி தர்மராஜன், BE.,
பரவாக்கோட்டை.

# கிளையில் ஒரு தேவதை

முட்டைக்கும் மதிப்புண்டு
உள்ளிருந்து பிளப்பதால்!

குடியுரிமைப் போராட்டத்தின்
நடுவே
சிறகை விரித்து பறக்கிறது
ஒரு பறவை!

மனிதனின்
உள்ளங்கையில் சிறைபடாமல்
தோளில் அமரும் தோழனே!
கடலையே
உதறிவிட்டுப் பறக்கிறாய்
வானில்!

அனைத்து
மத ஆலயங்களிலும்
ஒரே வழியில்
உனது வழிபாடு!

ஒரு மரத்தில்
ஒய்வெடுத்து
ஓராயிரம் மரங்களை
விதைத்து விட்டுச் செல்கிறாய்!

விண்ணையும் மண்ணையும்
சிறகால் அளக்கும் நீ
மரக்கிளை சிம்மாசனத்தில்
இளைப்பாறுகிறாய்
ஒரு தேவதையாக!

உன் பாட்டனுக்கு
நன்றிக்கடனாற்ற
தோள்களைத் தரும் மரத்தில்
கனிகளைக் கடிக்கிறாய்
மனிதனோ கல்லெறிகிறான்
தன் பாட்டன் சொத்து என!

நட்சத்திரங்களாய்
சிதறிய தானியங்கள்
சேர்த்த பெருங்கூட்டம்
மேகமாய் நகர்கிறது வானில்!

ராணுவமே
அண்ணாந்துப் பார்க்கிறது
வானில் பறவைகளின்
அணிவகுப்பு!

அழகுப் பெண்ணே
அசந்து பார்க்கிறாள்
கிளையில் உனது கேட் வாக்!

குரலிசை எழுப்பி
கூட்டத்தை கூட்டிய
முதல் புரட்சியாளனே!
குரலிசையை ரசிப்பவன்
கவிஞனாகிறான்

பறவையே! இனி
மனிதனில் மனிதத்தை
விதை!

--

**சா.கா.பாரதி ராஜா,**
38-3, கைலாசநாதர் கோயில் தெரு,
பெரிய நத்தம்,
செங்கல்பட்டு - 603002
9944315732

# மகளிர் தினம்

கடந்த நூற்றாண்டுகளில்
பெண் பிறப்பு,
உடனடியே இறப்பு
நிகழும் நூற்றாண்டில்
பெண் பிறப்பு,
முற்றிலும் சிறப்பு

பெண் தன் அருமை அறியவே
ஆண்டுகள் பல ஆயிற்று.
பெண் தன் பெருமை அறியாமலே
இன்னும் சிற்றாண்டுகள் போயிற்று

அவள் வீரம் அறியாதவன் ஒரு
கோழை.
அவள் அன்பின் ஆழம் அறியாதவன்
ஒரு ஏழை..
வினையை விதைப்பது அவன்
என்றாலும், வினை அறுப்பது அவள்
தானே..

உணர்வுகளை மதிக்கத் தெரிந்தவள்,
துரோகியையும் மன்னிக்கத்
தெரிந்தவள்,
சர்ச்சைகளையும் சகித்துக் கொள்ளத்
தெரிந்தவள்..
அத்தகைய அவளுக்கு சிலர் தரும்
பட்டம் மலடி,விதவை, வேசி இன்னும்
எண்ணற்றவை

நம்மை பெற்றெடுத்த அவளுக்கு
நாம் தந்த பரிசு எழும்புடைத்த
வழிகளும்,
வயிறு முழுக்க மாறாத் தழும்புகளுமே.
சமம் என்பதை சாதனையிலும்
செதுக்கி விட்டாள்.
அடிமைத் தனத்தை அடியோடு
பதுக்கி விட்டாள்

பெண் வாசம் அறியாதவனுக்கு
உயிர் சுவாசம் இல்லை
பெண் பாசம் புரியாதவனுக்கு
நரகம் தான் எல்லை

அவளுக்கு அவள் தான் நிகர்
அவளையே வெல்ல..
வார்த்தைகளுக்குள்ளும் மல்லுக்கட்டு
நடைபெறுகிறது அவள் தன் குணத்தை
எடுத்துச்சொல்ல
நானும் அவள் என்ற கர்வத்துடன்!

மகளிர் தின நல்வாழ்த்துக்கள்!

--



சுபஸ்ரீ விஸ்வலிங்கம், B.E.
வேப்பங்குளம்

# யாருக்காக...!?

இதோ வந்துவிட்டது
பொதுத் தேர்வு.....!

இரண்டாண்டுகள்
பயிற்சியின்
அரங்கேற்றம்....!

குல தெய்வம் வேண்டி...?
திருநீறு பூசி....!
தாயத்து கட்டி...!
போருக்கு செல்லும்
போர்வீரன் போல்
குழந்தையை...

கவனமாய் தேர்விற்கு
அனுப்பும் பெற்றோர்கள்....!?

குழந்தைகள் தேர்வெழுத...
நிலையின்றி தவிக்கிறது
பெற்றோர் மனம்...!

மருத்துவமும், பொறியியலும்
மட்டுமே படிப்பு என்ற
சமூகத்தின் பார்வை.....!

உறவினர்களின்
நெருக்குதல்...!

பங்காளி பிள்ளைகளின் படிப்பு...?

எத்தனை மதிப்பெண்
எடுப்பான்...?

என்ன படிப்பான்
என...?

முறைப் பெண் வீட்டில் எதிர்பார்ப்பு...!
இத்தனையும்
நிவர்த்தி செய்ய..

எழுத வேண்டும் தேர்வு...!

அது சரி -
தேர்வு எனக்காகவா..?

ஊருக்காகவா...!?
புரியாமல் இருக்கிறேன்...!

வினாத்தாள்,
கேள்விகளை போல்...!?



முனைவர். சா.சம்பத்
மன்னார்குடி

# துளிப்பாக்கள்

இலைகளற்ற மரம்
வேர் விடுகிறது
மேகத்தில்

சுமங்கலிக்காக
அமங்கலி ஆனது
பூ பூத்த கொடி


ஓரிலை மறுக்கப்பட்டவனுக்கு
ஆயிரம் இலைகளிட்டது
குப்பைத் தொட்டி

வேகவேகமாக
ரசித்துவிட்டுச் செல்லும் மரங்கள்
சன்னலோரப் பயணம்

இடைவெளியே
இடைவெளியை குறைத்தது
நமக்குள்

--

சா.கா.பாரதி ராஜா
செங்கல்பட்டு
9944315732





ஓவியம்
ராஜேஷ்
8ம் வகுப்பு



## மனோ குணசேகரன்

என் இதய துடிப்பில்
உருவெடுக்கும் வார்த்தைகளை
காகிதத்தில் வடிக்கும் விரல்கள்..!

இன்று ஏனோ நொடிக்கிறது..!!

விரல்கள் மறுத்த வார்த்தைகளை
என் இரு இதழ்கள்
வடிக்க துடிக்கிறது
ஆச்சரியம்..!

காகிதத்தில் அல்ல
அவள் காதுமடலிலும்
கழுத்திலும்..!!

அது கவிதையாக
வினாடியில் முடியலாம்..!

மாறாக கதையாக
விடிய விடியவும் தொடரலாம்..!!

முத்தங்களை கன்னங்களிலும்
இதழ்களிலும்
பதிய வேண்டுமென்றில்லை.
என் கைகளை அவள்
இறுகப் பற்றிக் குலுக்கினாள்.
அது ஆயிரம் முத்தங்களுக்கு ஈடு.

தெரிந்தவர்
வீட்டு முற்றத்தில்
அவளைப் பார்த்தபோது
அது எங்களின் வீடானது.

அவளைக் காணாமல்
போயிருந்தால்
என்னைக் காணாமலே
போயிருக்கும் காதல்.

என் மீது பார்வையில்
ஒளி வெளிச்சத்தைப்
பாய்ச்சும் நீ;
என் இதயம் தைக்கும்
ஒலிக் கற்றைகளை
எப்போது வீசப் போகிறாய்?

என் கைகளை
இறுகப் பற்றிக் கொள்
என்னை நான்
தொலைத்தது போல்
உன்னையும்
தொலைத்து விடப் போகிறேன்.

எனக்குத் தெரிந்தவரை
என்னோடு
நான் இல்லை.

கொதிக்கும் குழம்பில்
குதிப்பில் மீன்
அதற்கு இன்னும்
இருக்கிறது உயிர்.

விலங்கு
விலங்கினைக் கொன்றால்
காடு.
மனிதன்
மனிதனைக் கொன்றால்
நாடு.

என் உயர்வைத் தூற்றியவன்
வார்த்தைகளில்
சொல்லாமல் கொள்ளாமல்
அனாதையானது
என் இரவு பகல் உழைப்பு.

இரவு வந்ததும்
சல்லடையாகிறது
நட்சத்திரங்களால்
நிரம்பிய வானம்.

பிரிந்திருந்தாலும்
ஓடும் வெள்ளத்தை
சேர்த்தணைக்கும்
ஆற்றின் கரைகள்.

--



## கவிஞர்.பாரியன்பன்
82/32-B, பிள்ளையார் கோவில் தெரு
காமாட்சியம்மன் பேட்டை
குடியாத்தம் - 632602
அலைப்பேசி : 9443139353





அ. பிரின்ஸ்

பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

மன்னையின் மைந்தர்கள்
மண்ணின் மாற்றத்தை நோக்கி

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal Thiravukolmagazine